புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை ஊராட்சி, தெற்கு நல்லிப்பட்டியில் பகுதிநேர அங்காடியினை, நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 15.02.2025 அன்று திறந்து வைத்தார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

அரிமளத்தில் முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, பிப். 18 -

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகளை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 15.02.2025 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களுக்கு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கிராமப்புறங்களில், குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை ஊராட்சி, தெற்கு நல்லிப்பட்டியில் பகுதி நேர அங்காடியினையும், மிரட்டுநிலை ஊராட்சி, மிரட்டுநிலையில் அங்கன்வாடி கட்டடத்தினையும், ஓணாங்குடி ஊராட்சி, சத்திரம் பகுதியில் அங்கன்வாடி கட்டடத்தினையும், சமுத்திரம் ஊராட்சி, மடத்துப்பட்டியில் கலையரங்கம் கட்டடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் பொன். இராமலிங்கம், வி.ஆர். இளையராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஒன்றிய அரசு கல்விக்கு நிதி தராத நிலையிலும்

மாணவர்களின் கல்விக்கு பல்வேறு சிறப்புதிட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர்!

கரூரில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், பிப். 18 -

ஒன்றிய அரசு கல்விக்கு நிதி தராத நிலையிலும் மாநில அரசின் நிதியில் இருந்து மாணவச் செல்வங்களுக்கு, பல்வேறு சிறப்பு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 1404 மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கி அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில், சென்ற மாதம் 4,5 மற்றும் 11,12 தேதிகளில், 6500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்ட கரூர் மாவட்ட அளவிலான பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான, கபடி, கொக்கோ, கையுந்து பந்து , எறிபந்து, கூடைப்பந்து, தடகள விளையாட்டுப் போட்டிகள் கரூர் மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற 1404 மாணவச் செல்வங்களை வாழ்த்தி பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கும் விழா கரூர் பிரேம் மஹாலில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி அனைத்து மாணவ மாணவியருக்கும் பரிசு சான்றிதழ் கேடயம் ஆகியவற்றை வழங்கினார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது

விழாவில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கு போதிய நிதி தராத நிலையிலும் கூட, மாநில அரசின் சொந்த நிதியை பயன்படுத்தி மாணவ செல்வங்களுக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை முதலமைச்சர் நிறைவேற்றி வருகிறார் என அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

ஒன்றிய அரசு தமிழ் நாட்டிற்கு உரிய நிதி பங்கீட்டை தராமல் வஞ்சித்து வருகிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு கல்வி நிதி தராத நிலையிலும் கூட, மாநில அரசின் சொந்த நிதியை பயன்படுத்தி கல்விக்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

கரூர் மாவட்டத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வெளி மாவட்டம், வெளி மாநிலங்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செல்லும் போது அவர்களுக்கான அனைத்து செலவுகளையும் சொந்த செலவில் ஏற்றுக் கொண்டு வருகறேன். தற்பொழுது வெளிநாடுகளுக்கு விளையாட சென்றாலும் அந்த செலவுகளையும் அவர்களுக்கு அளிக்கப்படும் என அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

விழாவில் எம்எல்ஏக்கள் இரா.மாணிக்கம், (குளித்தலை), ஆர். இளங்கோ, (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி, (கிருஷ்ணராயபுரம்), நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகரச் செயலாளர் எஸ்.பி கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப . ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் .ராஜா, மத்திய மேற்கு பகுதி செயலாளர் ஆர் ஜோதிபாசு, மத்திய கழக பொறுப்பாளர் விஜி எஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே. பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், அமைச்சர் செந்தில் பாலாஜி கலந்து கொண்டு 1,404 மாணவ மாணவிகளுக்கு கோப்பைகளையும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்.

அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 22.02.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநில தலைவர் **டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி.** தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. மார்ச் 1ம் தேதி, கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் குறித்து.

2. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் வளர்ச்சி குறித்த ஆலோசனை

இடம்: அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 17.02.2025

டி.செங்குட்டுவன்,
மாநில செயலாளர்,
தி.மு.க. அமைப்பு சாரா
ஓட்டுநர் அணி

கோவை வடக்கு மாவட்டம் கரும்புக்கடை பகுதி திமுக செயலாளர் எஸ்.ஜெய்லாப்தீன் ஷஹர் பானு மகள் அஃபரின் பாத்திமா அப்துல் கலாம் ஆசாத் ஆகியோரது திருமண விழாவை முன்னிட்டு, அவரது இல்லத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்.கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், மாநில நிர்வாகிகள் பொள்ளாச்சி உமாபதி, டாக்டர் கோகுல் , அம்பாள் நந்தகுமார் பகுதி செயலாளர் கேபிள்மணி வட்டக்கழக செயலாளர் இப்ராகீம் குத்துப்தீன், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் எ.எம்.உசேன், ஏ.கே.வேலுச்சாமி, துரைகரதிரவன் , கோவை அபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மணமக்களை வாழ்த்தினர்.

ஈரோடு, மாநகரம் சூரியம்பாளையம் பகுதி வார்டு எண் 7, 15 ஆகிய பகுதிகளில் நடைபெற்று முடிவடைந்த கான்கிரீட் சாலைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.குமாரவடிவேலு, வி.சி.நடராஜன், மண்டல குழு தலைவர் ப.க.பழனிச்சாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

ஈரோடு தெற்கு மாவட்டத்தில்

முதல்வர் பிறந்த நாளை நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, பிப். 18 -

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

1.3.2025 திங்கட்கிழமை அன்று தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை (இளைஞர் எழுச்சி நாள்) முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகர பகுதிக்குட்பட்ட வார்டுகள் ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஊர்கிளை மற்றும் பேரூராட்சிகளுக்கு உட்பட்ட வார்டுகளில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி 17.3.2025 ஆம் தேதி முதல் 17.4.2025 தேதி வரை நடைபெற உள்ளது.

மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்கிளை மற்றும் துணை அமைப்புகளின் நிர்வாகிகள் நலத்திட்ட உதவிகள் வழங்க தங்களுக்கு வசதியான தேதிகளையும், இடங்களையும் பட்டியலிட்டு மாவட்ட கழகத்தில் உடனே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர் கிளை நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BLC உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு

17.3.2025 அன்று சித்தோடு பேரூராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

18.3.2025 அன்று நசியனூர் பேரூராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

ஈரோடு தெற்கு மாவட்ட மாநகரக் கழக துணை அமைப்புகள் மாவட்ட இளைஞரணி, மாவட்ட மகளிர் அணி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு, மாவட்ட மருத்துவ அணி, மாவட்ட வழக்குரைஞர் அணி, மாவட்ட நெசவாளர் அணி, மாவட்ட பொறியாளர் அணி, மாவட்ட விவசாய அணி, மாவட்ட மீனவர் அணி, மாவட்ட மாணவர் அணி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மாவட்ட இலக்கிய அணி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி, மாவட்ட வர்த்தக அணி, மாவட்ட தொண்டரணி, தொழிலாளர் முன்னேற்ற சங்கம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி, தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி, மாவட்ட தொழிலாளர் அணி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, மாவட்ட அயலக அணி,

மாநகர இளைஞரணி, மாநகர மகளிர் அணி, மாநகர மகளிர் தொண்டரணி, மாநகர சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, மாநகர ஆதிதிராவிடர் நல குழு, மாநகர நெசவாளர் அணி, மாநகர பொறியாளர் அணி, மாநகர விவசாய அணி, மாநகர கலை இலக்கிய பேரவை, மாநகர இலக்கிய அணி, மாநகர விவசாய தொழிலாளர் அணி, மாநகரத் தொண்டர் அணி, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி, மாநகர வழக்கறிஞர் அணி ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, பேரூர், வார்டு, ஊர் கிளை மற்றும் துணை அமைப்புகளின் நிர்வாகிகள் சென்னிமலை ஒன்றியம், மொடக்குறிச்சி கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றியங்கள், கொடுமுடி மேற்கு, தெற்கு, வடக்கு ஒன்றியங்கள், ஈரோடு ஒன்றியம் ஆகிய எட்டு ஒன்றியங்கள் சூரியம்பாளையம் வீரப்பன் சத்திரம், பெரிய சேமூர் கோட்டை, சூரம்பட்டி, பெரியார் நகர், கொல்லம்பாளையம் கருங்கல்பாளையம் ஆகிய எட்டு பகுதிகள் சித்தோடு நசியனூர் அவல்பூந்துறை மொடக்குறிச்சி அரச்சலூர் வடுகப்பட்டி கொடுமுடி சிவகிரி வெங்கம்பூர் சென்னசமுத்திரம், கொல்லங்கோயில், பாசூர் வெள்ளோட்டம் பரப்பு, கிளாம்பாடி ஊஞ்சலூர் உள்ளிட்ட பேரூர்களிலும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி பிறந்த நாள் (இளைஞர் எழுச்சி நாள்) நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட இருப்பதால் 17.03.2025 முதல் 17.04.2025 வரை தங்களுக்கு வசதியான தேதி மற்றும் இடம் பட்டியல் மாவட்ட கழக அலுவலகத்தில் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம், எலச்சிபாளையம், கபிலர்மலை, மோகனூர் புதுச்சத்திரம் மற்றும் இராசிபுரம் உள்ளிட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.15.12 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்,, அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாங்குடி மதியழகன்
பிப்ரவரி 18 (1974)



கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.